**நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் பிரகாரம் அரசாங்க கணக்குக் குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான அவதானிப்புகள் மற்றும் அது தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை முன் வைத்தல்**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : **183**

நிறுவனத்தின் பெயர் : சுற்றாடல் அமைச்சு

| குழுவினால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைப்பாடுகள் | குறைப்பாடுகளை சரி செய்யும் பொருட்டு நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் / நடப்பு நிலை |
|---|---|
| 2004.05.11 ஆம் திகதிய இலக்கம் 171/2004 ஐ உடைய அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளத்தைத் தயாரிக்கும் கணினி மென் பொருளுடன் தொடர்புடைய முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச் சொற்கள் மூன்று மாதத்துக்கொருமுறை மாற்றத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை ரீதியாக முகங் கொடுக்க வேண்டியேற்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அக் கால கட்டத்தில் இது செயற்படாதிருந்திருப்பினும், கணக்காய்வு அவதானிப்புகளின் பிரகாரம் தொடர்புடைய கடவுச் சொற்கள் தயாரிக்கப்பட்டு சம்பளத்தைத் தயாரிக்கும் கணினி மென் பொருள் செயற்படுத்தப்படும். |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன் வைக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலப் பகுதியினுள் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலப் பகுதியினுள் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பரவிய கொவிட் 19 தொற்று நோய் நிலை காரணமாக விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை மற்றும் அரசின் அனைத்து அலுவலகங்களும் தமது பணிகளை முன்னெடுக்கையில் முகங் கொடுக்க வேண்டியேற்பட்ட தடைகளுக்கு மத்தியில் சுற்று வட்டமொன்றின் அடிப்படையில் அரச உத்தியோகத்தர்களை பணிக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒரு சில சந்தர்ப்பங்களில் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விடையளிக்கையில் பிற அரச நிறுவனங்களிலிருந்தும் தகவல் பெறப்பட்டு பல்வேறு பிரிவுகளினால் தயாரிக்கப்பட்ட பதில்களைக் கூட்டிணைத்து இறுதி அறிக்கை தயாரிக்கப்படும். இதனால், ஒரு சில சந்தர்ப்பங்களில் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டிருப்பினும், எதிர் வரும் காலப் பகுதியில் இத்தகைய தாமத நிலைகள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வண்ணமுள்ளது. |
| வாகனமொன்று பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு 6 மாத காலப் பகுதியை விடக் குறைவான காலப் பகுதியினுள் முற்றாக வெளியக்கற்றப்பட்டிருக்கவில்லை. | இவ் அமைச்சின் பயன்பாட்டிருலிருந்து நீக்கப்பட்டு, முற்றாக வெளியகற்றுவதற்கென பிரேரிக்கப்பட்ட வாகனங்கள் மோட்டார் கைத்தொழில் துறை தொடர்பாக கல்வி பயில்கின்ற மாணவர்களினது பிரத்தியேக பயிற்சி நடவடிக்கைகளுக்கென தேசிய இளைஞர் சேவைகள் சபைக்கு கையளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், செசி இலக்கம் நீக்கப்பட்டுள்ள இலக்கம் 18 - 3797 ஐ உடைய மோட்டார் வாகனம், பயிற்சிச் செயற்பாடுகளுக்கென எனது இலக்கம் 02/02/ரு/01/Vol VI (Vehicle Disposal) மற்றும் 2020.02.28 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தேசிய இளைஞர் சேவைகள் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.<br><br>இலக்கம் 18 - 1358 ஐ உடைய மோட்டார் வாகனத்தினதும் பதிவு இரத்து செய்யப்பட்டு, பயிற்சிச் செயற்பாடுகளுக்கென எனது இலக்கம் 02/02/ரு/01/Vol VI மற்றும் 2022.03.25 ஆம் |

| | |
|---|---|
| | திகதிய கடிதத்தின் மூலம் தேசிய இளைஞர் சேவைகள் சபைக்கு கையளிக்கப்பட்டிருப்பினும், அவர்கள் முகங் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ள போக்குவரத்து இடர்ப்பாடுகள் காரணமாக அவ் வாகனம் இது வரை கொண்டு செல்லப்படவில்லை. மீண்டும் 2022.12.31 ஆம் திகதிநினைவூட்டல் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. |
| தொடர்புடைய ஒழுங்கு விதி முறைகளுக்கு அமைய ஒன்று திரட்டிய வருமானம் மீள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இவ் அமைச்சு வருமானம் திரட்டுகின்ற அமைச்சாகக் காணப்படுவதில்லை. எனினும், ஒரு சில சந்தர்ப்பங்களில் கிடைக்கப் பெற்ற விலை மனு வைப்பீட்டுப் பணம், கருத்திட்டங்களின் ஊடாக கிடைக்கப் பெற்ற சிறு வருமானக் கணக்கெள சுருக்கக் குறிப்பின் ஊடாக மாதாந்தம் அரசாங்க வருமானத்தில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| மொத்த பணிக் குழுவும் உள்ளடங்களாக செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு உடன்படிக்கைக்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மொத்த பணிக் குழுவும் உள்ளடங்களாக செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு உடன்படிக்கைக்கு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டியிருப்பினும், இவ் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இது தொடர்பாக ஆராய்ந்து செயலாற்றுகை ஒப்பந்தங்களைத் தயாரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. |
| மானிட வளங்கள் அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதற்கும், கொள்திறன் மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனத்தினால் முது நிலை அதிகாரியொருவர் பெயரிடப்பட்டிருக்கவில்லை.<br><br>திட்டமிடப்பட்ட பயிற்சிகளின் ஊடாக வழங்கப்பட்டிருந்த பயிற்சிக்கான வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% ஐ விட குறைவாக காணப்பட்டது. | இலக்கம் 02/2018 ஐ உடைய பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மானிட வளங்கள் மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மானிட வளங்கள் மேம்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கும், கொள் திறன் மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்கும், நிறுவனத்தினால் முது நிலை அதிகாரியொருவர் பெயரிடப்பட்டுள்ளார்.<br><br>குறித்த திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறை ரீதியாக முன்னெடுப்பதில் கொவிட் 19 தொற்று நோய் நிலை தங்கு தடையாகக் காணப்பட்டமையும், பிற்பாடு நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் 03/2022 மற்றும் 2022.04.26 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் ஊடாக அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவதுடன் தொடர்புடையதாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும், ஒரு சில பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை இடை நிறுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது. எனினும், 2023 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சிகளை திட்டமிடப்பட்டவாறு முன்னெடுப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. |

**வைத்தியர் அனில் ஜாசிங்க**
செயலாளர்